
# மகாத்மாகாந்தி ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி ஆசிரமம்

மகாத்மா காந்தி அடிகளின் மறைவுக்குப் பின் காந்திய - சர்வோதய தத்துவத்தை அடிப் படையாகக் கொண்டு மக்களுக்கு சேவை செய்வதற்கு பாரத தேச மக்கள் சர்வோதய சமாஜம் என்னும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி செயற்படத் தொடங்கினார்கள்.

இச் செய்தியை அறிந்த இலங்கை மக்கள் காந்திய - சர்வோதய தத்துவத்திற்கமைய மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்துடன் 1949 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் ஒன்றுகூடி அகில இலங்கை காந்தி சேவா சங்கம் என்னும் பெயரில் ஓர் அமைப்பை உருவாக்கி செயற்படத் தொடங்கினார்கள்.

அகில இலங்கை காந்தி சேவா சங்கம் அமைத்த போது அன்பர்கள் ஆவலுடன் தொண்டு அடிப்படையில் சேவை செய்ய முன்வந்தார்கள். இவர்களுள் நீர்வேலி திரு. சி.க. வேலாயுதபிள்ளை அவர்கள் முழு நேர ஊழியராக சேவை செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வந்தமையால் காந்தி சேவா சங்கப் பணிகள் துரிதமாகச் செயற்படத் தொடங்கின.

கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதியில் அரசாங்கத்திடம் பெற்றுக் கொண்ட ஏழு ஏக்கர் காணியில் காந்தி நிலையம் நிறுவப் பெற்று மாணவர் இல்லம் தொடங்கிய போது திரு.சி.க.வேலாயுதபிள்ளை காந்தி நிலைய நிர்வாகத்தைப் பொறுப்பேற்றார். இவருடைய முயற்சியால் காந்தி நிலையம் துரித வளர்ச்சியடைந்தது.

அடுத்து அக்கராயன் கோணாவில் கிராமத்தில் அரசாங்கத்திடம் 300 ஏக்கர் காணியைப் பெற்று காந்திக் கிராமம் அமைக்கும் பணி மேற்கொள் ளப்பட்டது. இத்திட்டத்திற்கு திரு.சி.க. வேலா யுதபிள்ளைமுன்னோடியாக இருந்தது குறிப் பிடத்தக்கது.

1969 - ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 2ஆம் தேதி மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தின நுற்றாண்டு விழா இலங்கையில் நடைபெற்ற போது காந்தி சேவா சங்கம் பெரியளவில் பங்கு பற்றியது. இவ்விழாவின் ஞாபகார்த்தமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு K .C தங்கராசா அவர்களின் ஆதரவோடு கொழும்பு இந்து கல்விச் சபைக்குரிய இரத்தமலானை காணியில் சர்வோதய நிகேதனம் நிறுவப்பட்டது. இந்நிலையத்திற்கு சர்வோதய தலைவர் லோக்நாயக் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் அடிக்கல் நாட்டினார். கட்டடம் பூர்த்தியானதும் மாணவர் இல்லம் உருவாயிற்று. அத்துடன் சர்வோதய அச்சகம் நிறுவப் பெற்று காந்தீயம் ( தமிழ் ) சாந்தி மார்க்கய ( சிங்களம்) ஆகிய பத்திரிகைகள் பிரசுரம் ஆகின. இதன் வளர்ச்சிக்கு சர்வோதய பாத்திரம் ( பிடியரிசி ) திட்டத்தின் மூலம் மக்கள் உதவியளித்து வந்தனர். "சர்வோதய நிகேதனம்" துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் நிலையில் எதிர்பாராத விதத்தில் நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக சர்வோதய நிகேதன திட்டம் கைவிடப்பட்டது. யுத்தம் காரணமாக காந்தி சேவா சங்கப் பணிகள் பெரிதும் பாதிப்படைந்தன. நிறுவிய கட்டடங்கள் அழிந்து போயின. இவற்றைப் புனரமைப்புச் செய்வது மிகவும் கடினமாக இருந்தது. அங்கத்தவர்கள், ஊழியர்கள் நிலைகுலைந்து போயிருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் சூழ்நிலையை அவதானித்த போது சங்கத்தைப் புனரமைப்பதற்கான வழிவகைகள் தெரியவில்லை. பிரார்த்தனை செய்து கொண்டிருந்தோம். திடீர் திருப்பமாக 2004 ஆம் ஆண்டு யுத்தநிறுத்தம் ஏற்பட்டு சமாதான சூழ்நிலை தோன்றியது. இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சங்கத்தைப் புனரமைக்கும் பணியில் ஈடுபட்டோம். பழைய அங்கத்தவர்கள் சிலருடன் அங்கத்தவர்களாக சேர விரும்பும் ஆர்வலர்களையும் சேர்த்து சங்கக் கூட்டத்தினை நடத்துவது எனத் தீர்மானித்தோம். அன்றைய சூழ்நிலையில் ஒரு இடத்தைத் தேடி அங்கு கூட்டம் நட்த்துவது என்பது இயலாத காரியமாகவே இருந்தது. திரு.ஆ.சபாரத்தினம் அவர்களை அணுகிய போது கந்தர் மடம் சிவகுருநாத பீடம் மடாதிபதி ஸ்ரீமத் சோமாஸ்கந்தவேள் சுவாமி அவர்களைச் சந்தித்து ஏற்ற ஒழுங்குகளைச் செய்து தருவதாகக் கூறினார். மற்றும் பல அங்கத்தவர்களைச் சேர்த்தும் உதவினார். இறைவன் அருளால் 22.08.2004 ஆம் தேதி யாழ்ப்பாணம் , கந்தர்மடம் சிவகுருநாத பீட மண்டபத்தில் பீடாதிபதி ஸ்ரீமத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமாஸ்கந்தவேள்சுவாமிகளின்அருளாசியுடன் காந்தி சேவா சங்கம் புனரமைக்கப் பெற்ற நன்நாள் ஆகும். நிகழ்வின் முக்கிய அம்சமாக காந்தி சேவா சங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான செயற்குழுவொன்று தெரிவானதோடு இடையே நின்ற காந்தீயம் பத்திரிகையை வெளியிடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சரஸ்வதி - பிருந்தாவனம் அறக் கட்டளை நிதியுதவியுடன் சங்கத்தின் பணிகள் மெதுவாக நகர்ந்து கொண்டிருக்கையில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சமாதானத்திற்கான சூழ்நிலை உருவாகியது.

காந்தி சேவா சங்கத் தலைவர் ஓய்வுநிலை அரச அதிபர் திரு.தி.இராசநாயகம் அவர்களின் தலைமையில் கூடிய கூட்டத்தில் கிளிநொச்சி - உருத்திரபுரத்தில் அமைந்துள்ள காந்திநிலையத்தை மீளப்பெற நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானமாயிற்று. திரு. தி.இராசநாயகம் அவர்கள் பெருமுயற்சி செய்து காந்தி நிலையக் காணியை மீளப் பெற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டடங்களை அமைத்து மாணவர் இல்லத்தைத் தொடங்கினார். காந்தி நிலையம் சிறுவர் இல்லம் சிறப்பாக இயங்கி வருகிறது.

திரு.சி.க.வேலாயுதபிள்ளை அவர்களின் பெருமுயற்சியால் கிளிநொச்சி - கோணாவில் பகுதியில் காந்திக் கிராமம் அமைப்பதற்கு அரசாங்கத்திடம் பெற்ற 300 ஏக்கர் காணியில் காந்திய நிர்மாணப் பணிகள் அவசியம் தொடங்க வேண்டும். அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகியவை தொடர்பாக சுமுகமான தீர்வு காண வேண்டியது காலத்தின் அவசிய தேவையாக அமைந்துள்ளது. இதற்கான வழிவகை எவையென நீண்டகாலமாக ஆலோசித்து வருகிறோம். இது தொடர்பாகப் பல அன்பர்களுடன் உரையாடினோம். திருப்திகரமான வழிவகைகளைக் காண முடியவில்லை.

தமிழ்நாடு காந்திய - சர்வோதய தலைவர் திரு. மு. மாரியப்பன் அவர்கள்,தமிழ்நாடு திண்டுக்கல் - காந்தி கிராமிய பல்கலைக்கழகப் பேராசிரியர் எஸ் . நாராயணசாமி , " சர்வோதயம் மலர்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" சஞ்சிகையின் ஆசிரியர் திரு. க. மு. நடராஜன் ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்த போது இவர்களைச் சந்தித்து உரையாடிய போதிலும் திட்டமான வழிமுறைகளை அறிந்து கொள்ள முடியவில்லை.

இந்நிலையில் 2011 டிசம்பர் 29 , 30 , 31 ஆகிய நாட்களில் மதுரையில் நடைபெற்ற 44 ஆவது சர்வோதய மகாநாட்டிற்கு வருகை தருமாறு அகில இலங்கை காந்தி சேவா சங்கத்திற்கு அழைப்பு வந்தது. சங்கம் சார்பாக 15 அன்பர்கள் மகாநாட்டில் பங்குபற்றினர். மகாநாட்டிற்குச் சென்றமையால் பல காந்திய சர்வோதய ஊழியர்களைச் சந்தித்து உரையாடச் சந்தர்ப்பம் கிடைத்தது. காந்தி அடிகளின் நிர்மாணத் திட்டங்களைச் செயற்படுத்திக் கொண்டிருக்கும் நிறுவனங்களையும் பார்வையிடக் கூடியதாக இருந்தது. இதன் பயனாக இலங்கையில் காந்தி சேவா சங்கப் பணிகளில் புதிய திருப்பம் ஏற்பட வேண்டுமென்ற எண்ணம் உதயமாயிற்று.

மதுரை காந்தி மியூசியம் வளாகத்தில் அமைந்துள்ள காந்திய இலக்கியச் சங்கத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தக நிலையத்தைப் பார்வையிட்ட போது காந்திய சிந்தனையாளர் ஸ்ரீ காகா காலேல்கர் அவர்கள் எழுதிய " எரிப்பிறவி " என்னும் நூலைப் படிக்க நேர்ந்தது. இந்நூலுக்கு மகாரிஷி க. அருணாசலம் அவர்கள் எழுதிய முன்னுரையின் இறுதிப் பந்தி மிகவும் கவரத்தக்கதாக இருந்தது. குறித்த பகுதி ,

மேல்நாட்டுப் புராணங்களில் குறிப்பிட்ப்படும்
“பீனிக்ஸ்” என்னும் பறவையின் பிறப்பும்
இறப்பும் மற்றப் பறவைகளிலிருந்து
முற்றிலும் மாறுபட்டதாகும். “பீனிக்ஸ்”
தானே தோற்றுவிக்கும் தீயில் தானே
எரிந்து இறந்து போகுமாம். இவ்வாறு
எரிவதனால் ஏற்படும் சாம்பலில் புதிய
“பீனிக்ஸ்” தோன்றுமாம். சத்தியத்தையும்
அகிம்சையையும் அடிப்படையாகக் கொண்ட
சர்வோதய சமுதாயம் முழுமையாக அமையும்
வரை காந்தியடிகள் தம் வாழ்நாளில்
தோற்றுவித்த ஆசிரமங்களைப் போன்று
மேலும் பல ஆசிரமங்கள் இனியும் தோன்றி
சோதனைகள் தொடர்ந்து நடைபெற வேண்டும்
என்பதன் குறியீடே " எரிப்பிறவி " அனைவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலைப் படித்துப் பயன்பெறுமாறும், ஆர்வம் மிக்கவர்கள் " எரிப்பிறவி " சோதனையில் பங்கு கொள்ளுமாறும் அழைக்கிறோம்..

*மகரிஷி. க. அருணாசலம்*
*மதுரை*
*19.9.94*

*இதனைப் படித்ததும் "எரிப்பிறவி" சோதனையில் பங்கு கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உருவாகியது. இதற்கமைய இலங்கையில் மகாத்மா காந்தி ஆசிரமம் ஒன்றை அமைத்து சோதனையில் ஈடுபடுவது சிறந்ததென தீர்மானமாயிற்று.*

*இத் தீர்மானம் குறித்து அமரர். மு. மாரியப்பன் அவர்களிடம் கூறிய போது மிகச் சிறந்த திட்டமென வரவேற்று ஆவன செய்வதாகச் சொன்னார். இவர் ஒரு செயல்வீரர், தாமதமின்றி திரு. தேவதாஸ் காந்தி என்பவரோடு உரையாடி இலங்கையில் மகாத்மா காந்தி ஆசிரமம் அமைத்து வழிகாட்டுவதற்கு அனுப்புவதாகக் கூறிய போது பெருமகிழ்ச்சி ஏற்பட்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.தேவதாஸ் அவர்கள் தமிழ்நாடு இயற்கை மருத்துவ சங்கத்தின் இணைச் செயலாளராகப் பணிபுரிவதால் இப்பணிக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்து புறப்படச் சிறிது காலமாயிற்று. விடாமுயற்சியின் காரணமாக திரு. தேவதாஸ் காந்தி அவர்கள் 18.01.2016 ஆம் தேதி இலங்கைக்கு வருகை தந்தார். இவருடன் தமிழ்நாடு சர்வோதய மண்டல் செயலாளர் திரு . S.T . இராஜேந்திரன் அவர்களும் வருகை தந்தார். இவர்களுக்கு கிளிநொச்சி, காந்தி சேவா சங்கத்தினர் காந்தி நிலையத்தில் மகத்தான வரவேற்பு அளித்தனர். பின் காந்திக் கிராமம் உட்படப் பல இடங்களைப் பார்வையிட்டு காந்தி ஆசிரமம் அமைப்பதற்கு பொருத்தமான கிராமத்தைத் தெரிவு செய்தார்கள்.

1969 ஆம் ஆண்டு மகாத்மா காந்தி பிறந்த முதல் நூற்றாண்டாக 1969 இல் இலங்கையில் கொண்டாடப் பெற்ற போது மில்க்வைற் சோப் தொழிலதிபர் திரு . க. கனகராசா அவர்களின் அனுசரணையுடன் தொல்புரம் வித்துவான் நா. சிவபாதசுந்தரம் அர்கள் 1969 . 10 . 02 ஆம் தேதி " காந்தி கிராமம் " என்னும் பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். அவர் இப் பிரசுரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"மகாத்மா காந்தி பிறந்த முதல் நூற்றாண்டாக 1969 ஆம் ஆண்டு அமைகிறது. அடுத்து வரும் நூற்றாண்டுக்கு நான் உயிரோடு வாழப் போவதில்லை ஆகவே அவரிலும் அவரின் கருத்துக்களிலும் அன்புடைய நான் இந்த நூற்றாண்டிலே ஏதாவது ஒரு காணிக்கை செய்ய வேண்டுமென்று என்னுள்ளம் துடித்தது.

இத்தகு நிலையில் ஈழவள நாட்டில் காந்தி நூற்றாண்டு விழாக் கொண்டாடுவோர் ஒவ்வொரு காரியதிகாரி பிரிவிலும் ஒவ்வொரு காந்திக் கிராமம் தெரிந்து அவைகளை சத்திய சமுதாயமாக மறுமலர்ச்சியடையும் திட்டமிட்ட செய்தி வெளிவந்தது. உடனே இச்செய்திக்கு உறுதுணையாக காந்தியாரின் கருத்தை வெளியிடல் நலம் என்று எண்ணி அவர் எழுதிய ஆசிரம வரலாறு என்ற நூலைத் துணையாகக் கொண்டு காந்தி கிராமம் என்ற இவ்வாக்கத்தை அமைத்தேன்.

இவர் வெளியிட்ட பிரசுரத்திற்கமைய காந்தி நூற்றாண்டு விழாவின் போது கிராமங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வித பணியும் நடைபெறவில்லை. ஆனால் ஆடம்பரமான நிகழ்ச்சிகளுடன் காந்தி நூற்றாண்டு விழா முற்றுப் பெற்றது. *02.10.2019* ஆம் தேதி மகாத்மா காந்தி அடிகளின் நூற்றி ஐம்பதாவது பிறந்த தினம். இதனைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கு இந்தியாவில் பல நிர்மாணத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்குரிய ஆயத் தங்கள் நடைபெற்று வருகின்றன. மகாத்மா காந்தி அடிகளின் நூறாவது பிறந்த தின விழாவின்போது செயற்படுத்த முடியாமற் போன நிர்மாணத் திட்டங்களையும் மேலும் பயனுள்ள பல திட்டங்களையும் செயற்படுத்த வேண்டும்.

இலங்கையிலும் அடிகளாரின் நூற்றி ஐம்பதாவது பிறந்த தின விழாவின் போது ஆக்கபூர்வமான திட்டங்களை செயற்படுத்த வேண்டும். மகாத்மா காந்தி ஆசிரமம் அமைப்பது சிறந்த திட்டமாகும். இப்போதிலிருந்தே பணியைத் தொடங்கத் தருணம் வந்துள்ளது.

எரிப்பிறவிப் பிரசுரத்தை ஸ்ரீ காகா காலேல்கர் இப்பின்வரும் பந்தி மூலம் பூர்த்தி செய்துள்ளார்.

அகிம்சை வழியில் சென்று சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளால் பெற்றுள்ள சுதந்திரத்தை இழந்து விடாமல் அதன் வேரை உறுதிப்படுத்தி உலகத்திற்குச் சேவை செய்யக்கூடிய சக்தி நம்நாட்டிற்கு உண்டாகும் வகை செய்ய வேண்டுமானால் காந்திஜியின் ஆசிரம வாழ்க்கை பற்றிய சோதனைகளை நம்நாடு பூராகவும் மீண்டும் ஏற்று நடத்த வேண்டும். இத்தகைய ஆசிரமங்கள் கிராமக் கைத்தொழில் மயமாக இருக்க வெண்டியதோடு அவற்றின் சூழ்நிலையில் கல்வியில் மணமும் அதிகமாகக் கமழ வேண்டும்.

இந்தப் புத்தகத்தை பழைய காலத்தில் நடந்த படிப்பினைகள் மலிந்த சோதனைகளின் வர்ணனைகளைக்கொண்டதென்றுகருதக்கூடாது. தேசத் தந்தையின் மூலமாக வருங்காலத்தின் 500 வருடத்தியதேசியசாதனைக்கெனஇயற்றப்பட்ட ஓர் ஊக்கமளிக்கும் சோதனையென்ற வகையில் இதனைப் படித்து மனஉறுதி பெறும் பொருட்டு இந்த வரலாற்றைப் பயில வேண்டும். 1933 இல் நின்று போன சோதனை பல உருவங்களில் நாட்டின் பல இடங்களிலும் மீண்டும் தொடங்கப்பட வேண்டும். அப்பொழுது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா புத்துயிர் பெற்றுத் திகழும்.

சத்தியம், அகிம்சை ஆகியவற்றைக் கடைப்பிடித்துத் தொண்டு செய்பவர்கள் தோல்வியடைவதில்லை.ஆகவே ஆர்வம் மிக்கவர்களை எரிப்பிறவி சோதனையில் பங்கு கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

"காந்தி சொன்ன மார்க்கமின்றி
கதி நமக்கு வேறில்லை"

- நாமக்கல் கவிஞர்

**பிருந்தாவனம்**
**சிவபுரம் - தபால்**
**பூநகரி - வழி, இலங்கை**
**அலைபேசி : 0778132314**
**0765726398**

**சோ. க. தம்பிப்பிள்ளை**
**நிர்வாக அறங்காவலர்**
**சரஸ்வதி - பிருந்தாவனம்**
**அறக்கட்டளை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினொரு மகா விரதங்கள்

01. சத்தியம்
02. அகிம்சை
03. பிரமச்சரியம்
04. நாவடக்கம்
05. கள்ளாமை
06. வெளவாமை
07. உடலுழைப்பு
08. சுதேசி
09. அஞ்சாமை
10. தீண்டாமை ஒழிப்பு
11. சகிப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாத்மாகாந்தியின் சீடர்




ஆச்சாரிய வினோபாபாவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org